

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (28.09.2024) முகாம் அலுவலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.9.2024) காஞ்சிபுரத்தில், பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைசெல்வி மோகன் உள்ளார்.

### குஜராத் வெள்ளத்தில் சிக்கித் தவித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த

# 26 நபர்களை தாயகம் அழைத்து வர முதல்வர் உத்தரவு!

## அயலகத் தமிழர் நலத்துறை சார்பில் துரித நடவடிக்கை!

சென்னை, செப்.29-
அயலகத் தமிழர் நலத் துறை செய்தி வெளியீடு வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த 26 நபர்கள், குஜராத்தின் பாவ்நகருக்கு புனித யாத்திரை சென்று திரும்பும் போது 26.09.2024 அன்று, மலேஸ்ரீ ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் அவர்கள் சென்ற பேருந்து சிக்கியது.

இச்செய்தி அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு 26 தமிழர்களையும் தமிழகம் அழைத்து வர அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி அயலகத் தமிழர் நலத்துறை அதிகாரிகள் குஜராத் மாநில நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து பாதிக்கப்பட்ட தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுத்தனர்.

அதன் விளைவாக 26 தமிழர்களையும், குஜராத் மாநில நிருவாகம் மற்றும் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் பாதுகாப்பாக மீட்டு, அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவி, தங்குமிடம், உணவு ஏற்பாடு செய்யப்பட்டு பாவ்நகரில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட 26 தமிழர்களும் இரயில் மூலம் சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு 01.10.2024 அன்று காலை வந்தடைகின்றனர். சென்னை வந்தடையும் 26 தமிழர்களுக்கும் அயலகத் தமிழர் நலத்துறை சார்பில் வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டு அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

இவ்வாறு அயலகத் தமிழர் நலத்துறை தெரிவித்துள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.9.2024) காஞ்சிபுரத்தில், பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில், அங்கு வைக்கப்பட்டுள்ள பார்வையாளர் குறிப்பேட்டில் "மாநில உரிமைகளை பெற அண்ணா வழியில், கலைஞர் வழியில் அயராது உழைப்போம்! நன்றி, வணக்கம்!" என்று எழுதி கையொப்பமிட்டார். உடன் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைசெல்வி மோகன் உள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!




## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி பயிற்சி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தி.மு.க. இளைஞர் அணி நடத்திய **'என் உயிரினும் மேலான..!'** என்ற பிரமாண்ட பேச்சுப் போட்டியில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். முதல் கட்டமாக, மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக மண்டல அளவிலான போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு திராவிட இயக்கப் பேச்சாளர்களைக்கொண்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
29.09.2024 ஞாயிறு அன்று நடைபெறும் இந்தப் பயிற்சி முகாம் குறித்த விவரம் வருமாறு:

**29-09-2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ. எண் | வருவாய் மாவட்டம் | பயிற்சி நடைபெறும் இடம் | பயிற்சியாளர்கள் | நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை, செங்கல்பட்டு | ஜெயின் மகளிர் கல்லூரி, பேருந்து நிலையம் அருகில், தியாகராய நகர், சென்னை-17. | கோவி.செழியன், மருத்துவர் எழிலன், கோவி.லெனின், மருத்துவர் யாழினி, ஜீவசகாப்தன் | எஸ்.ஜோயல் |
| 2 | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், புதுச்சேரி | சூர்யா கல்விக் குழும கல்லூரி, விக்கிரவாண்டி, விழுப்புரம்-52. | பொன். முத்துராமலிங்கம், மதுரை பாலா, சுகுணா திவாகர், டான் அசோக், சூர்யா கிருஷ்ணமூர்த்தி | ப.அப்துல் மாலிக் |
| 3 | காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, வேலூர் | எ.வ.வேலு மகளிர் மேல்நிலைப் பள்ளி, வேட்டவலம் சாலை, திருவள்ளுவர் நகர், திருவண்ணாமலை-1. | நாஞ்சில் சம்பத், சி.வி.எம்.பி.எழிலரசன், உமா, சௌமியன், மகிழ்நன் | க.பிரபு |
| 4 | நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் | சப்தகிரி பொறியியல் கல்லூரி, சேலம்-பெங்களூரு நெடுஞ்சாலை, பெரியன்னஹள்ளி, தருமபுரி-5. | வழக்கறிஞர் அருள்மொழி, வே.மதிமாறன், அமுதரசன், பத்மப்ரியா, செந்தில்வேல், தமிழ் காமராசன் | பி.எஸ்.சீனிவாசன் |
| 5 | கரூர், திருப்பூர், கோவை, நீலகிரி, ஈரோடு | மகரிஷி வித்யா மந்திர் பள்ளி, ஈங்கூர், பெருந்துறை, ஈரோடு-52. | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், வழக்கறிஞர் சரவணன், மதிவதனி, இந்திரகுமார் தேரடி, பொள்ளாச்சி சித்திக் | கே.இ.பிரகாஷ் |
| 6 | அரியலூர், பெரம்பலூர், திருச்சி, திருவாரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், காரைக்கால் | கரந்தை தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-கும்பகோணம் நெடுஞ்சாலை, சுந்தரம் பிள்ளை நகர், தஞ்சாவூர்-2. | முனைவர் சபாபதி மோகன், கவிதைப்பித்தன், வழக்கறிஞர் பரந்தாமன், மருத்துவர் ஹபீஸ், விஜயபாஸ்கர் | நா.இளையராஜா, சி.ஆனந்தகுமார் |
| 7 | திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், சிவகங்கை | அமெரிக்கன் கல்லூரி, அழகர் கோவில் பிரதான சாலை, தல்லாக்குளம், மதுரை-20. | கம்பம் செல்வேந்திரன், டி.செங்குட்டுவன், புதுக்கோட்டை விஜயா, மருத்துவர் ஷஃபி சுலைமான், சூர்யா சேவியர், மில்டன் | ஜி.பி.ராஜா |
| 8 | திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தென்காசி, தூத்துக்குடி | கீதாஜீவன் மெட்ரிகுலேஷன் பள்ளி, போல்பேட்டை, புதிய பேருந்து நிலையம் அருகில், தூத்துக்குடி-2. | கடலூர் புகழேந்தி, எஸ்.கே.பி.கருணா, கவிஞர் சல்மா, வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, வரவணை செந்தில், ராஜகம்பீரன் அப்பாஸ் | இன்பா ஏ.என்.ரகு |

**பயிற்சியில் கலந்துகொள்வோர் கவனத்திற்கு**

* பயிற்சியில் கலந்துகொள்ள வருபவர்கள், கல்லூரி / அலுவலக அடையாள அட்டை, ஆதார் கார்டு போன்ற ஏதேனும் ஓர் அடையாள அட்டையை எடுத்து வர வேண்டும். * பயிற்சி காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெறும். * காலை மற்றும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. * பயிற்சி தொடங்கும் நேரத்தில் பங்கேற்பாளர்கள் அரங்கத்தில் இருக்கவேண்டும். * பயிற்சியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் தங்களுடன் பெற்றோர் அல்லது உறவினர் ஒருவரை துணைக்கு அழைத்து வரலாம்.

**அன்பகம்**, சென்னை – 18.
நாள் : 25–09–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி